(2) DISCUSSION ON THE OFFICIAL LANGUAGE POLICY.

1-18

• THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Deputy Speaker, Sir, I move—

"That the Official Language Policy be taken into consideration".

கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, மொழிப் பிரச்சினை என்பதே நாம் சுதந்திரம் அடைந்ததனால் ஏற்பட்டது. சுதந்திரம் அடைவதற்குமுன்பு நாமெல்லோரும் தாய்மொழி என்ற அளவில் உணர்ந்து கொண்டிருந்தோம். அன்று அன்னிய ஆட்சி நடந்து கொண்டிருந்தது. அன்னிய ஆட்சிக் காலத்திலே மக்களுக்கு வேறு வகையே இல்லை. அவர்கள் ஏதோ இரண்டு ஆங்கில எழுத்து தெரிந்து கொண்டால்தான் ஏதாவது உத்தியோகமாவது கிடைக்கும், வேறு என்ன வழி இருக்கிறது என்று நினைத்தார்கள். கம்பெனியார் வந்தபோதும் அவர்களுக்கு உதவி வேண்டியிருந்தது. ஆகவே, ஆங்கிலம் படிக்க ஏற்பாடு செய்தார்கள்.

—

நான் கடலூரில் ஒரு பள்ளியைப் பார்த்தேன். சில ஆண்டுகளுக்கு முன்பு அங்கு நான் போயிருந்தேன். அப்பொழுது அந்தப் பள்ளியின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. அந்தப் பள்ளியின் வரலாற்றைப்பற்றி நான் கேட்டது சுவாரசியமாக இருந்தது. கம்பெனியைச் சேர்ந்த வெள்ளைக்காரர்கள் அங்கு வந்தபோது, அவர்களுக்குத் தமிழ் சொல்லிக் கொடுப்பதற்காக அந்தப் பள்ளி அமைக்கப்பட்டதாகச் சொன்னார்கள். இப்பொழுது அது சாதாரணப் பள்ளியாக நடந்து வருகிறது. வெள்ளைக்காரர்கள் கொஞ்சம் தமிழ் கற்றுக்கொண்டு, நம்மோடு இருந்து பழகி, நம்மிடமிருந்து பணம் சம்பாதிப்பது எப்படி என்று அவர்கள் கற்றுக்கொண்டார்கள். ஆங்கிலத்தையும் அவர்கள் கற்றுக்கொடுத்து வந்தார்கள். அன்னிய ஆட்சி நடந்தது. ஆகையால், அந்த ஆட்சி ஆங்கிலத்திலே இருந்தது. அப்பொழுது, சின்னப் பள்ளிக்கூடங்களில் நாம் தமிழ் கொஞ்சம் படிப்போம். முக்கியமான பாடங்களுக்குத் தமிழ் கிடையாது. நான் படித்த காலத்திலே கணக்கு எடுத்துப் படித்தேன். எனக்கு அறிமுகமாக இருந்தவர்கூட, "நீ கணக்கில் நல்ல மார்க் வாங்கி இருக்கிறாயே. நீ கணக்குதான் எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று வற்புறுத்தினார்கள். "வேண்டாம்" என்று நான் மறுத்த போதுகூட, "உன் பெற்றோர்களிடம் இருந்து எழுதி வாங்கி வா" என்றார்கள். எதற்காகச் சொல்கிறேன் என்றால், அந்தக் காலத்தில் சின்ன வகுப்பில்கூட ஒரு பாடத்தை எடுத்துக் கொண்டால் இன்னொரு பாடம் இல்லை. பல ஆண்டுகளுக்கு முன்பாக நான் "செனட்டில்" (Senate) இருந்தபோதுகூட எல்லாம் தமிழில் இருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறேன். அப்போது எல்லாம் மொழிப் பிரச்சினை என்பது கிடையாது.

30th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

சுதந்திரம் வந்தது. நாம் பெற்ற சுதந்திரம் மன்னும் இமய மலையில் இருந்து வாழும் குமரி மூனை வரையில் உள்ள பாரத நாட்டுக்கு வந்த சுதந்திரம். நாம் அதை மறந்துவிடக்கூடாது என்பதாகத்தானே என்னவோ "மன்னும் இமயமலை எங்கள் மலையே" என்று சொல்ல நமக்கு பாரதியார் கற்றுத் தந்தார். இமயம் முதல் குமரி வரையில் உள்ள பாரதம் முழுமையும் எடுத்துக் கொண்டால் இன்றைக்கு பல மொழிகள் பேசுகின்றவர்கள் இருக்கிறார்கள். இதன் காரணமாகத்தான் மொழிப் பிரச்சினை என்கிற ஒன்று உருவாகிறது.

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு நாம் ஒரு அரசியல் அமைப்புச் சட்டத்தை ஏற்படுத்தினோம். இந்த தேசத்தின் பல பாகங்களையும் சேர்ந்த நம்முடைய பிரதிநிதிகள் எல்லோரும் ஒன்றாக இருந்து நல்ல முறையில் ஆராய்ந்து ஒரு அரசியல் சட்டத்தைச் செய்தார்கள். நம்முடைய அரசியல் அமைப்பு "பெடரல் டைப்" (Federal type) . நாம் 'ரிட்டன் கான்ஸ்டிடியூஷனை' (written constitution) வகுத்தோம். அதில் மாநிலங்களைப் பொறுத்த வரையில் ஆட்சி மொழியாக அந்த அந்த மாநிலங்களின் மொழியையே வைத்துக்கொள்ளலாம் என்று வகை செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலும் தமிழ் ஆட்சிமொழி என்பதை மறுக்கவில்லை; தமிழிலேயே ஆட்சி நடத்தலாம் என்பதை அமைத்திருக்கிறார்கள். எல்லா மாநிலங்களுக்கும் பொதுவாக மத்திய ஆட்சி இருக்கிறது. அதில் இந்தியாவுக்கும் சேர்ந்து இருக்கக் கூடிய மத்திய ஆட்சியின் நிர்வாக மொழியாக எது இருப்பது என்பதுதான் பிரச்சினை. நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தில் இந்திதான் பொது மொழி என்று வைத்தார்கள். சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் ஈடுபட்டு வந்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். மகாத்மா காந்தி அவர்கள் காங்கிரஸ் மகாசபையின் தலைமையை ஏற்றுக்கொண்டவுடன் அவர்கள் தாம் காங்கிரஸ் ஸ்தாபனத்தை மாற்றி அமைத்தார்கள். முதலில் ஆந்திரா, கேரளம், மைசூர், சென்னை ஆகிய நான்கு ராஜ்யங்களும் சேர்ந்து இருந்தது போலவே காங்கிரஸ் கமிட்டியும் "மெட்ராஸ் ப்ரொவின்சியல் காங்கிரஸ்" (Madras Provincial Congress) என்று ஒன்றாகவேதான் இருந்தது. அப்போதும் பல மொழிக்காரர்கள் சேர்ந்து இருந்த காரணத்தினால் ஆங்கிலத்தில்தான் நடவடிக்கை நடக்கும். கனம் எதிர்க்கட்சித் தலைவர்—நான் சொல்வது பிழையாக இருந்தால் திருத்தலாம்—"திராவிடஸ்தான் என்று கேட்கிறீர்களே, ஆந்திரம், கன்னடம், மலையாளம், தமிழ் என்பதாக திராவிடஸ்தானில் எல்லோரும் சேர்ந்திருந்தால் எந்த மொழியில் பேசி உறவாட முடியும்?" என்று கேட்டபோது, "ஆங்கிலத்தில்தான் பொது நிர்வாகம் நடக்கும்", என்று தெரிவித்தார்கள் என்று நினைக்கிறேன். அப்படி முன்பு நான்கு மொழியினரும் சேர்ந்து இருந்த போது காங்கிரஸ் கமிட்டியில் ஆங்கிலத்தில்தான் நடவடிக்கை நடந்தது. அப்போதுதான், ஆங்கிலம் படித்தவர்கள் மட்டும் காங்கிரஸ் நடவடிக்கையில் பங்கு கொள்ளும்படி இருந்த நிலையை மாற்றி, இதைப் பொது மக்களுடைய ஸ்தாபனமாக மாற்றுவதற்கு

[திரு. எம். பக்தவத்சலம்] [30th March 1965

மொழிவாரி அடிப்படையில் காங்கிரஸ் ஸ்தாபனத்தைப் பிரித்து விடுங்கள் என்று யோசனை கூறினார்கள். அதன் பேரில்தான் 'தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி' என்று அமைத்தோம். ஆந்திரா காங்கிரஸ் கமிட்டி, கேரள காங்கிரஸ் கமிட்டி, கர்னாடக காங்கிரஸ் கமிட்டி என்று காங்கிரஸ் ஸ்தாபனம் அன்றைக்கே மொழிவாரி அடிப்படையில் பிரிக்கப்பட்டது. உள்ளூர் விவகாரங்களை அவரவர்கள் தாய் மொழியில்தான் நடத்த வேண்டும் என்று மகாத்மா காந்தி அவர்கள் சொன்னார்கள். காங்கிரஸ் ஸ்தாபனத்தை இப்படி மொழி அடிப்படையில் பிரித்து அதை மக்கள் ஸ்தாபனமாக ஆக்கின பெருமை காந்தி அடிகளைச் சார்ந்தது. ஆகவே அகில இந்திய காங்கிரஸ் மகாசபை வகுத்துக்கொண்ட 14 மொழிகள் என்ற அடிப்படையில் நம்முடைய அரசியல் சட்ட அமைப்பில் இவை இடம் பெற்றுள்ளன. நம்முடைய பாரதியார் பாரதத்தை ஒரு தாயாகப் பாவித்து, "இவள் செப்பும் மொழி பதினெட்டு உடையாள்" என்பதாகச் சொன்னார்கள். இப்படி பதினெட்டு மொழி பேசக்கூடிய மக்கள் இருக்கக்கூடிய ஒரு பெரிய தேசத்திற்கு ஒரு பொதுமொழி தேவை என்பதை, சுதந்திரம் நமக்கு பின்னல் வரப்போகிறது என்பதைத் தீர்க்க தரிசனத்தோடு கண்ட தேசப் பிதா மகாத்மா காந்தி அவர்கள் அன்றைக்கே உணர்ந்தார்கள். பல்வேறு மாநில பிரதிநிதிகளை எல்லாம் கலந்து, அன்றைக்கே இந்திதான் பொதுமொழியாக இருக்க முடியும் என்றார்கள். அதையே நம்முடைய நிர்மாணத் திட்டத்தின் முக்கியமான அம்சமாக ஏற்றுக் கொண்டோம். இந்தியையும் பலபேர் கற்றுக் கொண்டு வந்தார்கள். அப்போது கூட இந்த மொழிப் பிரச்சினை எழவில்லை. அரசியல் அமைப்பைச் செய்த பிறகுதான் இந்தப் பிரச்சினை எழுந்தது. அதுவும் இப்போது மொழிவாரியாக ராஜ்யங்களைப் பிரித்துவிட்டோம். மாநிலங்களைப் பொறுத்த வரையில் இந்தச் சிக்கல் இல்லை, பிரச்சினை இல்லை என்று சொல்லலாம். அரசியல் அமைப்புச் சட்டத்தினால்தான் இந்தப் பிரச்சினை வந்தது என்று கருதுகிறேன்.

குறிப்பாக, நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தில் இந்த மொழி சம்பந்தமாக உள்ள மூன்று ஆர்டிகிள்களைப் (articles) படிக்கிறேன். அதற்குமேல் நேரம் இருந்தால் இன்றைக்கே தொடர்ந்து பேசுகிறேன். இல்லை என்றால் நாளைக்குத் தொடர்ந்து மற்ற விஷயங்களை எல்லாம் குறிப்பிட நினைக்கிறேன்.

(திரு. கே. ஏ. மதியழகன் : இன்றைக்கே தொடர்ந்து பேசலாம்.) நேரம் இருக்காது. முக்கியமாக தனம் அங்கத்தினர்கள் நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள மூன்று பிரிவுகளை நன்றாக மனத்தில் இறுத்திக்கொள்ளவேண்டும் என்று நான் நினைக்கிறேன். அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள 343-ஆவது பிரிவு, 344-ஆவது பிரிவு, 351-ஆவது பிரிவு என்ன என்பதைப் பார்க்கவேண்டும்.

Article 343 says—

" (1) The official language of the Union shall be Hindi in Devanagari script.

30th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

The form of numerals to be used for the official purposes of the Union shall be the international form of Indian numerals.

(2) Notwithstanding anything in clause (1), for a period of fifteen years from the commencement of this Constitution, the English language shall continue to be used for all the official purposes of the Union for which it was being used immediately before such commencement :

Provided that the President may, during the said period, by order authorise the use of the Hindi language in addition to the English language and of the Devanagari form of numerals in addition to the international form of Indian numerals for any of the official purposes of the Union.

(3) Notwithstanding anything in this article, Parliament may by law provide for the use, after the said period of fifteen years, of—

(*a*) the English language, or

(*b*) the Devanagari form of numerals,

for such purposes as may be specified in the law ".

Article 344 says—

" (1) The President shall, at the expiration of five years from the commencement of this Constitution and thereafter at the expiration of ten years from such commencement, by order constitute a Commission which shall consist of a Chairman and such other members representing the different languages specified in the Eighth Schedule as the President may appoint, and the order shall define the procedure to be followed by the Commission.

(2) It shall be the duty of the Commission to make recommendations to the President as to—

(*a*) the progressive use of the Hindi language for the official purposes of the Union;

(*b*) restrictions on the use of the English language for all or any of the official purposes of the Union;

(*c*) the language to be used for all or any of the purposes mentioned in article 348;

(*d*) the form of numerals to be used for any one or more specified purposes of the Union;

(*e*) any other matter referred to the Commission by the President as regards the official language of the Union and the language for communication between the Union and a State or between one State and another and their use.

(3) In making their recommendations under clause (2), the Commission shall have due regard to the industrial, cultural and scientific advancement of India, and the just claims and the interests of persons belonging to the non-Hindi speaking areas in regard to the public services.

(4) There shall be constituted a Committee consisting of thirty members, of whom twenty shall be members of the House of the People and ten shall be members of the Council of States to be

elected respectively by the members of the House of the People and the members of the Council of States in accordance with the system of proportional representation by means of the single transferable vote.

(5) It shall be the duty of the Committee to examine the recommendations of the Commission constituted under Clause (1) and to report to the President their opinion thereon.

(6) Notwithstanding anything in article 343, the President may, after consideration of the report referred to in clause (5), issue directions in accordance with the whole or any part of that report ".

Article 351 says—

" It shall be the duty of the Union to promote the spread of the Hindi language, to develop it so that it may serve as a medium of expression for all the elements of the composite culture of India and to secure its enrichment by assimilating without interfering with its genius, the forms, style and expressions used in Hindustani and in the other languages of India specified in the Eighth Schedule, and by drawing, wherever necessary or desirable, for its vocabulary, primarily on Sanskrit and secondarily on other languages ".

மேற்கொண்டு நாளைக்குப் பேசுகிறேன்.

1-30 p.m. MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

IX.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

174. Notification issued with G.O. No. 2759, Revenue, dated 26th November 1964 making the Madras Hindu Religious Institution (Officers and Servants) Service Rules, 1964, in supersession of the rules published with late Rural Welfare Department Notification at pages 266-269 of Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 11th June 1952. (*Laid on the Table of the House under section* 116 (3) *of the Madras Hindu Religious and Charitable Endowments Act*, 1959 (*Madras Act* 22 *of* 1959.)

175. Notification issued with G.O. Press No. 1837, Revenue, dated 10th July 1964 making the Management and Preservation of Properties of Religious Institutions Rules. (*Laid on the Table of the House under section* 116 (3) *of the Madras Hindu Religious and Charitable Endowments Act*, 1959 (*Madras Act* 22 *of* 1959.)

B. Reports, Notifications and other papers.

* 103. The Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1965 (L.A. Bill No. 7 of 1965) with annexure.

* 104. The Madras Appropriation (No. 2) Bill, 1965 (L.A. Bill No. 8 of 1965).

* Circulated to Members on 27th March 1965.